www.prepp.in

**Lang. Code : 17**

इस पुस्तिका में **20** पृष्ठ हैं ।
This booklet contains **20** pages.

# ATA-19-II

**प्रश्न-पत्र II / PAPER II**
**तमिल भाषा परिशिष्ट**
**Tamil Language Supplement**
**भाग IV & V / PART IV & V**

**परीक्षा पुस्तिका संकेत**
**Test Booklet Code**

**E**

**परीक्षा पुस्तिका संख्या**
**Test Booklet No.**

**इस परीक्षा पुस्तिका को तब तक न खोलें जब तक कहा न जाए ।**
**Do not open this Test Booklet until you are asked to do so.**
**इस परीक्षा पुस्तिका के पिछले आवरण (पृष्ठ 19 व 20) पर दिए निर्देशों को ध्यान से पढ़ें ।**
**Read carefully the Instructions on the Back Cover (Page 19 & 20) of this Test Booklet.**

**तमिल में निर्देशों के लिए इस पुस्तिका का पृष्ठ 2 देखें । / For instructions in Tamil see Page 2 of this Booklet.**

## *INSTRUCTIONS FOR CANDIDATES*

1. This booklet is a supplement to the Main Test Booklet for those candidates who wish to answer **EITHER** Part IV (Language I) **OR** Part V (Language II) in **TAMIL** language, but **NOT BOTH**.
2. Candidates are required to answer Part I and Part II **OR** III from the Main Test Booklet and Parts IV and V from the languages chosen by them.
3. Questions on English and Hindi languages for Part IV and Part V have been given in the Main Test Booklet. Language Supplements can be asked for separately.
4. Use **Black/Blue Ball Point Pen only** for writing particulars on this page / marking responses in the Answer Sheet.
5. The CODE for this Language Booklet is **E**. Make sure that the CODE printed on **Side-2** of the Answer Sheet and on your Main Test Booklet is the same as that on this Language Supplement Test Booklet. In case of discrepancy, the candidate should immediately report the matter to the Invigilator for replacement of the Language Supplement Test Booklet.
6. This Test Booklet has **two** Parts, IV and V, consisting of **60** Objective Type Questions, each carrying 1 mark :
   Part-IV : Language I - (Tamil) (Q. 91 to Q. 120)
   Part-V : Language II - (Tamil) (Q. 121 to Q. 150)
7. Part-IV contains 30 questions for Language-I and Part-V contains 30 questions for Language-II. In this Test Booklet, only questions pertaining to Tamil language have been given. **In case the language/s you have opted for as Language-I and/or Language-II is a Language other than Tamil, please ask for a Test Booklet that contains questions on that language. The language being answered must tally with the languages opted for in your Application Form.**
8. **Candidates are required to attempt questions in Part -V (Language-II) in a language other than the one chosen as Language-I (in Part-IV) from the list of languages.**
9. Rough work should be done only in the space provided in the Test Booklet for the same.
10. The answers are to be recorded on the OMR Answer Sheet only. Mark your responses carefully. No whitener is allowed for changing answers.

## परीक्षार्थियों के लिए निर्देश

1. यह पुस्तिका मुख्य परीक्षा पुस्तिका की एक परिशिष्ट है, उन परीक्षार्थियों के लिए जो या तो भाग IV (भाषा I) **या** भाग V (भाषा II) **तमिल** भाषा में देना चाहते हैं, लेकिन **दोनों नहीं** ।
2. परीक्षार्थी भाग I एवं भाग II **या** III के उत्तर मुख्य परीक्षा पुस्तिका से दें और भाग IV व V के उत्तर उनके द्वारा चुनी भाषाओं से ।
3. अंग्रेज़ी व हिन्दी भाषा पर प्रश्न मुख्य परीक्षा पुस्तिका में भाग IV व भाग V के अन्तर्गत दिए गए हैं । भाषा परिशिष्टों को आप अलग से माँग सकते हैं ।
4. इस पृष्ठ पर विवरण अंकित करने एवं उत्तर पत्र पर निशान लगाने के लिए **केवल काले/नीले बॉल पॉइंट पेन** का प्रयोग करें ।
5. इस भाषा पुस्तिका का **संकेत** है E । यह सुनिश्चित कर लें कि इस भाषा परिशिष्ट पुस्तिका का संकेत, उत्तर पत्र के **पृष्ठ-2** एवं मुख्य परीक्षा पुस्तिका पर छपे संकेत से मिलता है । अगर यह भिन्न हो, तो परीक्षार्थी दूसरी भाषा परिशिष्ट परीक्षा पुस्तिका लेने के लिए निरीक्षक को तुरन्त अवगत कराएँ ।
6. इस परीक्षा पुस्तिका में **दो** भाग IV और V हैं, जिनमें **60** वस्तुनिष्ठ प्रश्न हैं, जो प्रत्येक 1 अंक का है :
   भाग-IV : भाषा-I (तमिल) (प्र. 91 से प्र. 120)
   भाग-V : भाषा-II (तमिल) (प्र. 121 से प्र. 150)
7. भाग-IV में भाषा-I के लिए 30 प्रश्न और भाग-V में भाषा-II के लिए 30 प्रश्न दिए गए हैं । इस परीक्षा पुस्तिका में केवल तमिल भाषा से संबंधित प्रश्न दिए गए हैं । **यदि भाषा-I और/या भाषा-II में आपके द्वारा चुनी गई भाषा(एँ) तमिल के अलावा है तो कृपया उस भाषा वाली परीक्षा पुस्तिका माँग लीजिए । जिन भाषाओं के प्रश्नों के उत्तर आप दे रहे हैं वह आवेदन पत्र में चुनी गई भाषाओं से अवश्य मेल खानी चाहिए ।**
8. **परीक्षार्थी भाग-V (भाषा-II) के लिए, भाषा सूची से ऐसी भाषा चुनें जो उनके द्वारा भाषा I (भाग-IV) में चुनी गई भाषा से भिन्न हो ।**
9. रफ कार्य परीक्षा पुस्तिका में इस प्रयोजन के लिए दी गई खाली जगह पर ही करें ।
10. सभी उत्तर केवल OMR उत्तर पत्र पर ही अंकित करें । अपने उत्तर ध्यानपूर्वक अंकित करें । उत्तर बदलने हेतु श्वेत रंजक का प्रयोग निषिद्ध है ।

परीक्षार्थी का नाम (बड़े अक्षरों में) : ____________________
Name of the Candidate (in Capitals) :

अनुक्रमांक : (अंकों में) ____________________
Roll Number : in figures
: (शब्दों में) ____________________
: in words

परीक्षा केन्द्र (बड़े अक्षरों में) : ____________________
Centre of Examination (in Capitals) :

परीक्षार्थी के हस्ताक्षर : ____________________
Candidate's Signature :

निरीक्षक के हस्ताक्षर : ____________________
Invigilator's Signature :

Facsimile signature stamp of
Centre Superintendent ____________________

**E**

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide



**Lang. Code : 17**

இந்த நூற்கட்டு **20** பக்கங்கள் கொண்டது

# ATA-19-II

## தாள் II

தேர்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு

**E**

## தமிழ் மொழி துணை நூற்கட்டு

## பகுதி IV & V

**அவிழ்க்கச் சொல்லப்படும் வரை யாரும் இந்த நூற்கட்டை அவிழ்க்கக் கூடாது. இந்த நூற்கட்டின் பின்பக்க உறைப்பகுதியில் (பக்கம் 19 & 20) காணப்படும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும்.**

**தேர்வு எழுதுவோர்க்கான வழிகாட்டும் குறிப்புகள்**

1. இந்நூற்கட்டு முக்கிய தேர்வு நூற்கட்டுக்கான இணைப்பாகும். இது பகுதி **IV** (மொழி I) **அல்லது** பகுதி V க்கு (மொழி **II**) **தமிழ்** மொழியில் விடையளிக்க விரும்புவோர்க்கு மட்டுமே உரியது. **இரண்டிற்கும் உரியது அல்ல.**
2. தேர்வு எழுதுவோர் முக்கிய தேர்வு நூற்கட்டின் பகுதி **I** & பகுதி **II அல்லது III** க்கும் அவர்கள் தேர்ந்தெடுத்த மொழிகளின் பகுதி **IV, V** ஆகியவற்றிற்கும் விடை அளிக்கவும்.
3. ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழிகளின் பகுதி **IV** மற்றும் பகுதி **V** ற்கான வினாக்கள் முக்கிய தேர்வு நூற்கட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. மொழி இணைப்பைத் தனியாக வாங்கிக் கொள்ள வேண்டும்.
4. இப் பக்கத்தில் வினவப்படும் உரிய விவரங்களை/விடைத்தாளில் நீர் மேற்கொள்ளும் பதில் வினையை **நீலம் மை பந்துருள்முனைப் பேனாவினால் மட்டும் நிரப்புக.**
5. இந் நூற்கட்டின் சங்கேதக் குறியீடு **E** ஆகும். இந் நூற்கட்டின் மீதும் இதன் **பக்கம் 2-லும்** அச்சாகி உள்ள சங்கேதக் குறியீடுகள் இரண்டும் ஒன்றே தானா என்பதைச் சரிபார்த்து உறுதி செய்து கொள்க. மேலும் உம் தேர்வு நூற்கட்டு எண்ணும் விடைத்தாள் எண்ணும் ஒன்றேதானா என்பதையும் சரிபார்த்து உறுதி செய்துகொள்க. இவை ஒன்றோடு ஒன்று முரணாக இருக்குமேயானால் தேர்வு எழுதுபவர் இது பற்றி உடனே தேர்வு மேற்பார்வையாளர் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். வேறொரு தேர்வு நூற்கட்டு மற்றும் வேறொரு விடைத்தாள் ஆகிய இரண்டையும் அவற்றிற்குப் பதிலாகக் கேட்டுப் பெற வேண்டும்.
6. இது தேர்வு நூற்கட்டு **2** பகுதிகள் கொண்டது. ஒரே ஒரு மதிப்பெண் நேரிய **60** பல் விடை வினாக்கள் கொண்ட இப்பகுதிகள் முறையே **IV & V** என்றவாறாக அமையும்.
   பகுதி **IV** : மொழி - **I** (தமிழ்) (வினாக்கள் 91 முதல் 120 வரை)
   பகுதி **V** : மொழி - **II** (தமிழ்) (வினாக்கள் 121 முதல் 150 வரை)
7. பகுதி **IV** இல் மொழி **I** க்கும், பகுதி **V** இல் மொழி **II** க்கும் தலா **30** வினாக்கள். இத் தேர்வு நூற்கட்டில் தமிழ் மொழிகளுக்குரிய வினாக்கள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன.இத்தேர்வு நூற்கட்டில் தமிழ் மொழிக்கான வினாக்கள் மட்டுமே உள்ளன. **தமிழ் மொழி நீங்கப் பிறமொழி எதனையேனும் மொழி I & II க்கு நீர் தெரிவு செய்திருப்பின் அம்மொழிக்குரிய வினாக்கள் கொண்ட தேர்வு நூற்கட்டைக் கேட்டுப் பெறவும். நீர் தேர்வு விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள மொழி தேர்ந்தெடுப்பும், தேர்வு நூற்கட்டில் எழுதியுள்ள விடை மொழியும் ஒன்றாகவே இருக்க வேண்டும்.**
8. **தேர்வு எழுதுவோர், மொழிகள் பட்டியலிலிருந்து தேர்ந்து கொண்ட மொழி I (பகுதி IV இல்) நீங்கலாகப் பிற வேறொரு மொழியை மொழி II (பகுதி V க்கு) தேர்ந்து கொண்டு விடையளிக்க வேண்டும்.**
9. இத் தேர்வு நூற்கட்டில் ஒதுக்கப்பட்டுள்ள முன்வரைவுப் பகுதியில் மட்டும் திருந்தாப் பதிவுகள் இடம் பெற வேண்டும்.
10. ஓ.எம்.ஆர் (OMR) விடைத்தாளில் மட்டுமே விடைகள் பதிவு செய்யப்பட வேண்டும். பதில் வினைகளைக் கவனமாகப் பதிவு செய்க. விடையைத் திருத்தம் செய்து மாற்றி எழுத வெண்ணிற மை ஏதும் பயன்படுத்தக் கூடாது.

தேர்வு எழுதுபவர் பெயர்(தலைப்பு எழுத்துகளில்) ____________________

தேர்வு வரிசை எண் : எண்ணில் ____________________

: எழுத்தில் ____________________

தேர்வு மையம் (தலைப்பு எழுத்துகளில்) ____________________

தேர்வு எழுதுபவர் கையொப்பம் ____________________

தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் ____________________

Facsimile signature stamp of Centre Superintendent ____________________

www.prepp.in



தேர்வு எழுதுவோர் தமிழைத் தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே பகுதி - IV [கே.எண்: *91 - 120*] க்கான விடைகளைத் தரவேண்டும்.

Candidates should attempt the questions from **Part - IV [Q. No. 91-120]**, if they have opted **TAMIL** as **LANGUAGE - I** only.

www.prepp.in



## PART – IV
## LANGUAGE – I
## தமிழ்

**பகுதி தேர்வு எழுதுவோர் தமிழைத் (LANGUAGE – I) தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே – IV (கே.எண்: 91-120) க்கான விடைகளைத் தரவேண்டும்.**

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண் 91-99)**

நம் இந்தியச் சமூகம் பல மொழிகளையும் பல பண்பாடுகளையும் பல மதங்களையும் உள்ளடக்கி உள்ளது. இந்தியாவின் ஒவ்வொரு மொழியும் தமக்கேயான அடையாளத்துடன் தமக்கான வரலாற்றைக் கொண்டுள்ளது. இந்தியாவின் பலவகைச் சமூகங்கள் தமக்கென தனித்த பண்பாட்டு அடையாளத்தைக் கொண்டிருக்கும். அதே வேளையில் இந்தியத் தன்மை கொண்ட பொது அடையாளங்கள் பலவும் காணப்படுகின்றன. மதங்கள் பல உள்ள இந்திய நாட்டில் அவற்றுக்கிடையிலான பரிமாற்றங்கள் தொடர்ந்து இருந்து வருகின்றன. முற்காலத்தில் பல நாடுகளாகவும் பல பேரரசுகளாகவும் பிரிந்து இருந்த இந்தியா நவீன கால மாற்றங்களின் வழியாக ஒரு பெரும் தேசமாக உருவானது. தமக்குள் இருந்த வேறுபாடுகளையும் முரண்பாடுகளையும் களைந்து பொது நன்மை தரும் தேசியத்தின் அடிப்படையில் நாம் ஒரு தேசத்தைக் கட்டி எழுப்பினோம். இதன் அடிப்படையாக அமைந்துள்ளது இந்திய அரசியலமைப்புச் சட்டமாகும்.

நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற உயர்ந்த கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு நம் அரசியல் சட்டம் அமைக்கப்பட்டுள்ளது. மதம், இனம், சாதி, பாலினம், பிறப்பிடம் என்ற அடிப்படையில் யாருடைய உரிமைகளும் மறுக்கப்பட மாட்டாது என்பதை உறுதி செய்துள்ள நம் அரசமைப்புச் சட்டம் தீண்டாமையை முற்றிலுமாகத் தடை செய்துள்ளதுடன் அதனைப் பேச்சிலோ செயலிலோ கடைப்பிடிப்பதைத் தண்டனைக்குரிய குற்றமாகவும் அறிவித்துள்ளது. அதன் மூலம் இந்தியச் சமூகத்தில் நிலவி வந்த பெரும் சமூகக் கொடுமை நீக்கப்பட்டுள்ளது.

நம் அரசமைப்புச் சட்டத்தை வடிவமைத்த மாமேதை அம்பேத்கர் இந்தியச் சமூகத்தை நீதியின் வழி அமைந்த, சமத்துவம் உடைய சமூகமாக அமைப்பதற்கான அடிப்படைகளை உருவாக்கித் தந்துள்ளார். அதனை நம் தேசத்தின் மாபெரும் தலைவர்கள் புகழ்ந்து ஏற்றுக் கொண்டனர். அண்ணல் காந்தியின் கொள்கைகளும் இந்திய அரசியலுக்கு மாபெரும் பங்கை ஆற்றியுள்ளனர். கிராம முன்னேற்றம், அனைவருக்குமான வாழ்வுரிமை, அனைவருக்குமான கல்வி என்பவை நம் நாட்டின் முக்கிய கொள்கைகளாக அமைந்துள்ளன.

பெண்களுக்கான சம உரிமையை உறுதி செய்துள்ள நமது அரசியலமைப்புச் சட்டம் காலம் காலமாக இருந்து வந்த பெண்ணடிமைத்தனத்தை சட்ட வகையில் தடை செய்துள்ளது. பலவகையான சமத்துவம், பலவகையான உரிமைகளை அளித்துள்ள நம் இந்திய அரசியல் ஒவவொருவருக்குமான கடமைகளையும் வரையறுத்துள்ளது. இவற்றைப் புரிந்துகொண்டு சமூக நீதியை மதித்து நடப்பது நம் அனைவரின் கடமையாகும். ஒவ்வொருவருக்குமான மனித உரிமைகளை மதிப்பதும், சுயமரியாதையுடன் அனைவரையும் நடத்துவதும் நவீன இந்தியச் சமூகத்தின் அடிப்படைக் கொள்கையாக அமைந்துள்ளது. இதனைப் புரிந்துகொள்ளும் போது மொழி, பண்பாடு, மதம் என்பவற்றால் நாம் வேறுபட்டு இருந்தாலும் இந்தியர் என்ற வகையில் இணைந்தவர்களாகிறோம். இதனை அனைவர்க்கும் புரியவைப்பதுதான் இந்தியக் கல்வி முறையின் அடிப்படைத் தேவையாக உள்ளது.

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide



**91.** காலம் காலமாக இருந்து வந்த ஒன்று :

(1) பெண்ணடிமைத்தனம்

(2) கிராம முன்னேற்றம்

(3) அனைவருக்குமான கல்வி

(4) நவீன இந்தியா

**92.** நம் அரசமைப்புச் சட்டத்தை வடிவமைத்த அம்பேத்கார் இந்தியச் சமூகத்தை ______ அமைக்க விரும்பினார்.

(1) கிராம முன்னேற்றம், அனைவருக்குமான வாழ்வுரிமை தருவதன் மூலம்

(2) நீதியின் வழி அமைந்த சமத்துவம் உடைய சமூகமாக

(3) அனைவருக்குமான கல்வி மூலம்

(4) மொழி, பண்பாடு, மதம் மூலம்

**93.** தீண்டாமையைக்______________ கடைப்பிடிப்பது குற்றம் :

(1) அரசியலமைப்பில்

(2) சகோதரத்துவ அடிப்படையில்

(3) பேச்சிலோ செயலிலோ

(4) மதத்தில்

**94.** நம் அரசியல் சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகள்:

(1) மதம், இனம், சாதி, பாலினம்

(2) மொழி, தேசம், மதம்

(3) நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்

(4) அடையாளங்கள், சமூகங்கள், மொழிகள்

**95.** நாம் தேசத்தை எதன் அடிப்படையில் கட்டி எழுப்பினோம்?

(1) பொது நன்மை தரும் தேசியம்

(2) நீதி, சுதந்திரம், சமத்துவம், நாடு

(3) மதம், மொழி, இனம்

(4) அரசியலமைப்பு, சாதி, சமூகம்

**96.** இந்தியா ஒரு பெரும் தேசமாக உருவாகும் முன்பு எப்படியிருந்தது?

(1) ஒரு மொழி பேசும் நாடாக

(2) மதம், இனம், சாதி இல்லாமல்

(3) நீதி, சுதந்திரம், சகோதரத்துவம் உடையதாக

(4) பல நாடுகளாகவும் பல பேரரசுகளாகவும்

**97.** இந்தியாவின் ஒவ்வொரு மொழியும் கொண்டிருப்பவை:

(1) தமக்கேயான அடையாளம், வரலாறு

(2) தமக்கேயான மதம், இனம், சாதி, நிலம்

(3) தமக்கேயான சுதந்திரம்

(4) தமக்கேயான அரசியலமைப்புச் சட்டம்

**98.** ____________மதித்து நடப்பது நம் அனைவரின் கடமை.

(1) சமூக நீதியை

(2) கொள்கைகளை

(3) அரசியலை

(4) ஆட்சியை

**99.** இந்தியச் சமூகம் இவற்றை உள்ளடக்கியது :

(1) அரசமைப்புச் சட்டம், தேசம், முரண்பாடுகள்

(2) பல மொழிகள், பண்பாடுகள், மதங்கள்

(3) நீதி, சுதந்திரம், சமத்துவம்

(4) நீதி, அரசமைப்புச் சட்டம், உரிமைகள்

www.prepp.in



கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண் **100-105)**

இந்தப் புவிதனில் வாழும் மரங்களும்

இன்ப நறுமலர்ப் பூஞ்செடிக் கூட்டமும்

அந்த மரங்களைச் சூழ்ந்த கொடிகளும்

ஔடத மூலிகை பூண்டுபுல் யாவையும்

எந்தத் தொழில் செய்து வாழ்வனவோ?

மானுடர் உழாவிடினும் வித்து நடாவிடினும்

வரம்பு கட்டாவிடினும் அன்றிநீர்ப்பாய்ச் சாவிடினும்

வானுலகு நீர்தருமேல் மண்மீது மரங்கள்

வகைவகையா நெற்கள் புற்கள் மலிந்திருக்குமன்றோ?

ஊனுடலை வருத்தாதீர் உணவியற்கை கொடுக்கும்

உங்களுக்குத் தொழிலிங்கே அன்புசெய்தல் கண்டீர்.

**100.** பூஞ்செடியில் உள்ளவை :

(1) மூலிகை ஔடதம்

(2) கொடிகள் கூட்டம்

(3) நல் மணம் கொண்ட மலர்கள்

(4) புல் பூண்டுகள்

**101.** மரங்களைச் சூழ்ந்தவை :

(1) மூலிகை, பூண்டு, புல்

(2) கொடிகள்

(3) பூஞ்செடிக் கூட்டம்

(4) நெற்கள்

**102.** வேளாண்மைத் தொழிலுக்குத் தொடர்பற்ற சொற்கள் :

(1) உழுதல், வித்து நடுதல்

(2) வரம்பு கட்டல், நீர் பாய்ச்சல்

(3) ஊனுடல் வருத்தல், வரம்பு கட்டல்

(4) அன்பு செய்தல்

**103.** உணவைக் கொடுக்கும் எனப் பாடல் கூறுவது :

(1) மரங்கள்

(2) இயற்கை

(3) கொடிகள்

(4) ஔடத மூலிகை

**104.** மனிதரின் தொழில் எனக் கவிஞர் கூறுவது :

(1) ஊனுடலை வருத்தல்

(2) உழுதல், நடுதல்

(3) அன்பு செய்தல்

(4) நீர் பாய்ச்சல்

**105.** இந்தக் கவிதை மனிதருக்கு விடுக்கும் செய்தி :

(1) மனிதர் தொழில் செய்து வாழ வேண்டும்.

(2) மனிதர் அன்பு செய்தல் வேண்டும்.

(3) மனிதர் ஊனுடல் வருத்தல் வேண்டும்.

(4) மரம், செடி கொடிகள் தொழில் செய்வது போல தொழில் செய்ய வேண்டும்.

www.prepp.in



கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண் **106-120)**

**106.** வாசிப்புத் திறமை என்பது இது கிடையாது :

(1) கன்ஸ்ட்ரக்டிவ்

(2) இமாஜினேடிவ்

(3) புரோக்ரசிவ்

(4) டெலிப்ரேட்

**107.** பின் வருவனவற்றில் எது விரிவான வாசிப்புடன் தொடர்புடையதில்லை?

(1) அது வாசிப்பதில் பெரும் இன்பம் தருகிறது.

(2) ஆழமான புரிதலுக்குரிய நுட்பமான தகவல்களைப் படிக்க உதவுகிறது.

(3) மொழி கற்பதை அது மேம்படுத்துகிறது.

(4) பாடப் பகுதியை முழுமையாகப் புரிந்து கொள்வதற்கான வாசிப்பு.

**108.** புராஸஸ் அப்ரோச் முறையிலான எழுத்துமுறை இதன் மீது கவனம் கொள்கிறது :

(1) புராஸஸ் மட்டும்

(2) உருவாக்கப்படும் எழுத்தில் மட்டும்

(3) புராஸஸ் மற்றும் எழுத்து இரண்டிலும்

(4) தெளிவான கையெழுத்தில் எழுதுதல்

**109.** மொழிப் பாடத் திட்டத்தில் இலக்கியத்தைச் சேர்ப்பதற்கான காரணங்களில் மிகக் குறைவான முக்கியத்துவம் பெறும் காரணி எது?

(1) கவனித்தறிதல், பேச்சுத் திறன், இரண்டுக்கு மட்டும் அது பயன்படுகிறது.

(2) அது நம்பகத்தன்மை கொண்ட எழுத்து.

(3) மற்றொரு பண்பாட்டை மாணவர்கள் புரிந்துகொள்ள அது உதவுகிறது.

(4) மாணவர்கள் தமது தனிப்பட்ட கருத்தைத் தெரிவிக்க ஊக்கமளிக்கிறது.

**110.** பின் வருவனவற்றில் எந்த வாசகம் சரியானது?

(1) நிறுத்தற்குறிகள் ஒரு வாக்கியத்தின் பொருளை மாற்றுகின்றன.

(2) நிறுத்தற்குறிகள் ஒரு வாக்கியத்தின் பொருளை அவ்வளவாக மாற்றுவதில்லை.

(3) எழுத்தின் அழகைக் கூட்ட நிறுத்தற்குறிகள் பயன்படுகின்றன.

(4) ஒரு எழுத்தின் வாசிப்பு ஓட்டத்தை நிறுத்தற்குறிகள் தடை செய்கின்றன.

**111.** மாணவர்களின் எழுத்தை மதிப்பிடும்போது அது மிக முக்கியமாகக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய கூறு :

(1) சரியான எழுத்து, சரியான இலக்கணம்.

(2) கருத்தை வெளிப்படுத்தும் முறை

(3) சொற்களின் அளவு கடந்து போகாமல் அமைத்தல்

(4) மரபு வழக்கு, முதுமொழிகள் பயன்படுத்தி எழுதுதல்.

**112.** என் ஸி எப் 2005 இன் வழிகாட்டு நெறிகளில் இணைக்கப்படாதது பின்வருவனவற்றில் எந்த ஒன்று ?

(1) பள்ளிக்கு வெளியே உள்ள வாழ்க்கையை அறிவுடன் தொடர்புபடுத்துதல்.

(2) குறிப்பேட்டு முறையில் இருந்து விலகியதாகக் கற்றல் அமைவதை உறுதிப்படுத்தல்.

(3) பாடத்திட்டம் பாடநூலை மையமாகக் கொண்டிருக்க வேண்டும்.

(4) தேர்வு முறை அதிக நெகிழ்வுத் தன்மை உடையதாக வகுப்பறை நடவடிக்கைகளுடன் இணைந்ததாக அமைத்தல்.

**113.** உண்மைத் தகவல்கள், என்ன நிகழ்ந்தது, எப்போது நிகழ்ந்தது, எங்கே நிகழ்ந்தது, நிகழ்வைத் தூண்டிய காரணிகள், நிகழ்வின் முடிவு என அனைத்தையும் சொற்களில் விவரிப்பது :

(1) புராஜக்ட் ஒர்க்

(2) அசைன்மெண்ட்

(3) அனக்டோடல் ரெக்கார்ட்

(4) ரேட்டிங் ஸ்கேல்

**114.** மொழி கற்கும் மாணவர்கள் என்ன நிலையில் இருக்கிறார்கள் என்பதைப் புலப்படுத்த மிகப் பொருத்தமான சான்றாக அமைவது எது ?

(1) தேர்வில் பெறும் மதிப்பெண்கள்.

(2) மாணவர்கள் எழுதும் கவிதைகள், பத்திகள்.

(3) தேசியப் பாடத்திட்டம், பாடப் பகுதி.

(4) மொழி இலக்குகள், நோக்கங்கள்.

**115.** வியகோட்ஸ்கி கருதுகோள் காட்டும் ஸ்கஃபோல்டிங் முறையின்படி மொழி வகுப்பு மாணவர்கள் இருவர் இருவராகவோ, குழுவாகவோ இணைந்து மொழிப் பயிற்சி செய்ய ஆசிரியர் வாய்ப்பு உருவாக்கித் தர வேண்டும். அதற்குக் காரணம் :

(1) பயிற்சிகளைக் கையாள்வது ஆசிரியருக்கு இலகுவாக உள்ளது.

(2) மாணவர்கள் தமக்குள் உரையாடிக் கொள்வதால் ஆசிரியர் ஓய்வு எடுக்க முடியும்.

(3) குழுச் செயல்பாட்டு உறவு கற்பதற்கான வழிகளை அளிக்கிறது. அது கற்பதை இயல்பானதாக ஆக்குகிறது.

(4) இப் பரிமாற்றம் மொழி கற்பதிலிருந்து மாணவர்களின் கவனத்தைக் கலைக்கிறது.

**116.** மொழி ஒலிப்பு, அதன் சேர்க்கையில் இருந்து தொடங்காமல் எளிய வாக்கியங்களில் தொடங்கி கற்பிக்கும் போது மொழி எளிதாகிறது. இதன் காரணம் :

(1) கருத்துப் பரிமாற்றம் முழு வாக்கியங்களை அடிப்படையாகக் கொண்டது.

(2) மொழி தன்வயப்படுத்தலில் உச்சரிப்புக்கு இடமில்லை.

(3) மொழி கற்பதில் இலக்கணத்திற்கும் உச்சரிப்புக்கும் சமமான முக்கியத்துவம் உள்ளது.

(4) மொழித் தொடர்பில் இலக்கணம் மிக முக்கியமான அடிப்படையாக உள்ளது.

**117.** ஏழாம் வகுப்பு ஆசிரியர் ஒருவர் யுடியூப் பயன்படுத்தி மாணவர்களுக்குக் கற்பிக்கிறார். விஷ்வல் மாணவர்களுக்கு வீடியோ, ஆடிடரி மாணவர்களுக்கு ரெக்கார்டிங்ஸ், கைனஸ்தெடிக் மாணவர்களுக்கு இன்டராக்டிவ் கேம்ஸ் என மொழி வகுப்பில் பயன்படுத்துகிறார். இதில் பயன்படும் மல்டி மீடியா அனைத்தும் தனித்தனி மாணவர்களின் இத் தேவையை நிறைவேற்றுவதாக உள்ளது.

(1) மொழித் திறன் வேறுபாடு

(2) கற்றல் திறன் முறை

(3) கற்றலில் உள்ள குறைபாடுகள்

(4) நம்பகத்தன்மை கொண்ட கற்பித்தல் கருவி

**118.** காக்னிடிவிஸ்ட் அணுகுமுறை என்ற அறிதலறிவு முறையில் மாணவர்கள் செய்யும் பிழைகளை ஒரு மொழி ஆசிரியர் இவ்வாறு கவனத்தில் எடுத்துக் கொள்ள வெண்டும் :

(1) கற்றலில் அது ஒரு இடையூறு, தடை

(2) கற்பதில் அதுவும் ஒரு பகுதி, அது ஊன்றிச் சிந்திக்க உதவி செய்கிறது.

(3) அது மறுமுறை நேராத வண்ணம் அவ்வப்பொழுது திருத்தம் செய்யப்பட வேண்டும்.

(4) கற்பதில் அவர்கள் கவனம் செலுத்தவில்லை என்பதால் உடனே அவை சுட்டிக் காட்டப்பட வேண்டும்.

**119.** ஊன்றிக் கவனித்தறிதல் என்பதன் பொருள் :

(1) ஒன்றிக் கவனித்தல்

(2) பொறுமையாகக் கவனித்தல்

(3) ஒழுங்குடன் கவனித்தல்

(4) கவனிக்கும் சகிப்பின்மை

**120.** அமைதியான வாசிப்பின் வழியாக ஒரு மாணவருக்கு மிகக் குறைவாகக் கிடைக்கும் மொழிக் கூறு :

(1) சொல் வளம்

(2) இலக்கணம்

(3) பேச்சுத் திறன்

(4) வாசிப்புத் திறன்

www.prepp.in



தேர்வு எழுதுவோர் **தமிழைத்** தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே **பகுதி - V** [**கே.எண்:** *121 - 150*] க்கான விடைகளைத் தரவேண்டும்.

Candidates should attempt the questions from **Part - V [Q.No. 121-150],** if they have opted **TAMIL** as **LANGUAGE - II** only.

www.prepp.in



# PART – V
# LANGUAGE – II
# தமிழ்

பகுதி – V தேர்வு எழுதுவோர் தமிழைத் (LANGUAGE – II) தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே (கே.எண்: 121-150) க்கான விடைகளைத் தரவேண்டும்.

**(Q. Nos. 121-128) :**

பரிசுகள், மணத்துணைகள் ஆகியவற்றின் பரிமாற்றங்கள் கருத்துப் பரிமாற்றத்தின் வடிவங்களேயென்றும் அத்தகைய பரிமாற்றம் கருத்தை வெளிப்படுத்துவதற்குத் தலைசிறந்த ஊடகமான மொழியைப் போன்றே கருதப்பட வேண்டும் என்றும் லெவிஸ்ட்ராஸ் அறிவித்தார். சசூரைப் பின்பற்றி அவர் உறவுப் பெயர்கள் ஒரு சமுதாய அமைப்பிலுள்ள ஏனைய உறவுப் பெயர்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டப்படுவதன் மூலம்தான் பொருள் பெறுகின்றனவென்றும் நெருங்கிய உறவினர்களிடமிருந்து தூரத்து உறவினர்களுக்கு நீட்டிப்பதன் மூலம் அல்லவென்றும் எடுத்துக்காட்டியது குறிப்பிடற்குரியது. மக்கள் தங்கள் மொழியின் அமைப்புப் பற்றித் தன்னுணர்வில்லாது இருத்தல் (அன்கான்சியஸ்) போலவே உறவு முறையில் அமைப்புப் பற்றியும் தன்னுணர்வற்று அதனை முழு நம்பிக்கையோடு ஏற்றுக் கொள்கின்றனர் என்பது லெவிஸ்ட்ராஸின் கருத்து.

உலகளாவிய குறியீடு என்று சொல்லக்கூடியது ஏதுமில்லை என்பது லெவிஸ்ட்ராஸின் முடிவு. சில குறியீடுகள் ஒன்றுக்கு மேற்பட்ட பண்பாடுகளில் காணப்படுமானால் அவை ஒரிடத்திலிருந்து மற்ற இடங்களுக்குப் பரவயிருக்க வேண்டும்; அல்லது குறியீட்டுப் பொருள்களின் உள்ளார்ந்த தன்மைகள் ஒரே மாதிரியான தொடர்புகளை அப்பண்பாடுகளுக்குச் சுட்டியிருக்க வேண்டும்.

தமது விலங்கு மனம் எனும் நூலில் இனச்சின்ன முறைமைக்கும் இந்தியாவின் சாதி அமைப்புக்குமுள்ள வியத்தகு ஒற்றுமைகளைப் பற்றியும் ஓரிடத்தில் லெவிஸ்ட்ராஸ் பேசுகிறார். ஓர் இனச்சின்ன முறைமைக் குழுக்களைக் கொண்ட சமுதாயத்தில், ஒவ்வொரு குழுவும் புறமண முறை கொண்டது; அது மணத்துணைகளை மற்ற குழுக்களோடு பரிமாற்றம் செய்து கொள்கிறது. அதனுடைய இனச்சின்னமாகிய பறவையையோ விலங்கையோ உணவாகக் கொள்வதில்லை. இந்தியாவில் வழக்கிலிருந்து வரும் சாதிகளில் ஒவ்வொன்றும் அகமண முறை கொண்டது; திருமணங்கள் அவ்வவ்சாதிக்குள்ளேயே நிகழ்கின்றன. ஒவ்வொரு சாதிக்குமென்று ஒரு தொழிலும் உண்டு. அது உழவாகவோ, பானை செய்வதாகவோ, நெசவாகவோ இருக்கலாம்.

**121.** ஒரே வகை இனச் சின்ன முறைமை உள்ள குழுக்கள் :

(1) புற மண உறவைக் கொண்டிராது.

(2) புற மண உறவைக் கொண்டவை.

(3) புற மன உறவைக் கொண்டவை.

(4) புற மன உறவைக் கொண்டிராது.

**122.** புற மணமுறை என்பது

(1) மணத் துணைகளைப் பிற நாடுகளுடன் ஏற்கும் முறை

(2) மணத் துணைகளைப் பிற குழுக்களோடு பேசும் முறை

(3) மணத் துணைகளைப் பிற குழுக்களோடு பரிமாறிக் கொள்ளும் முறை

(4) மணத் துணைகளைத் தன் குழுவிற்குள் பரிமாறிக் கொள்ளும் முறை

**123.** இனச் சின்னங்கள் இவ்வாறு உள்ளன:

(1) புற மணமுறை, அக மணமுறை

(2) சாதிகள், திருமணங்கள்

(3) தொழில் செய்வது, மணம் புரிவது

(4) பறவை, விலங்கு

**124.** சில குறியீடுகள் ஒன்றுக்கு மேற்பட்ட பண்பாடுகளில் காணப்படுமானால் :

(1) அவை ஓரிடத்திலிருந்து மற்ற இடங்களுக்குப் பரவியிருக்க வேண்டும்

(2) அவை பல இடத்திலிருந்து ஒரு இடத்திற்குப் பரவியிருக்க வேண்டும்

(3) அவை ஓரிடத்திலிருந்து மற்ற இடங்களுக்குப் பரவியிருக்காது

(4) அவை பல இடத்திலிருந்து ஒரு இடத்திற்குப் பரவியிருக்காது

**125.** குறியீட்டுப் பொருள்களின்__________ ஒரே மாதிரியான__________ பண்பாடுகளுக்குச் சுட்ட முடியும் :

(1) வெளியார்ந்த, கருத்துக்களைப்

(2) உள்ளார்ந்த தன்மைகள், தொடர்புகளைப்

(3) வியத்தகு, குறியீடுகளைப்

(4) தன்னுணர்வற்ற, கருத்துக்களைப்

**126.** லெவிஸ்ட்ராஸ் இவற்றிற்கு இடையேயான ஒற்றுமைகளைப் பேசுகிறார் :

(1) குறியீடுக்கும் அது பரவும் விதத்திற்கும்

(2) தன்னுணர்விற்கும் குறியீட்டிற்கும்

(3) தன்னுணர்விற்கும் நம்பிக்கைக்கும்

(4) இனச் சின்ன முறைமை மற்றும் இந்தியாவின் சாதி அமைப்பிற்கும்

**127.** மக்கள் தம் மொழியின் அமைப்பு பற்றி__________போலவே______ ______ பற்றியும் தன்னுணர்வற்று ஏற்றுக் கொள்கின்றனர்.

(1) தன்னுணர்வில் இருத்தல், உறவுமுறை அமைப்பு

(2) தன்னுணர்வில்லாது இருத்தல், மணத்துணைகள்

(3) தன்னுணர்வில்லாது இருத்தல், உறவு முறை அமைப்பு

(4) தன்னுணர்வில்லாது இருத்தல், உழவு முறை அமைப்பு

**128.** உலகளாவிய__________என்று சொல்லக் கூடியது__________ என்பது கருத்து.

(1) குறியீடு, ஏதுமில்லை

(2) குறியீடு, உண்டு

(3) தன்னுணர்வு, ஏதுமில்லை

(4) தன்னுணர்வு, உண்டு

www.prepp.in



கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண் **129-135)**

அறவண அடிகளின் வரலாறு மணிமேகலை என்னும் நூலினின்றும் அறியக் கிடக்கின்றது. இவர் காவிரிப்பூம்பட்டினத்தில் நெடுங்காலம் வாழ்ந்திருந்தவர். இவரது இளமையில் இவர் வடக்கே கங்கை முதல் தெற்கே இலங்கையில் உள்ள பாதபங்கய மலை வரையில் யாத்திரை செய்தவர் என்று தெரிகின்றது.பௌத்த தருமத்தை இவர் நன்கு கற்றவர். அதனோடு அதைப் பலருக்கும் போதித்து வந்தவர். இவர் நாவன்மை படைத்தவர் என்று தோன்றுகின்றது. காவிரிப்பூம்பட்டினத்தில் ஒரு பௌத்தப் பள்ளியின் தலைவராக இருந்தவர். கோவலன் கொலையுண்ட செய்தி கேட்டு, மாதவி தன் மகள் மணிமேகலையுடன் இவரது பள்ளியை அடைந்து, இவரிடம் பௌத்த தர்மங் கேட்டுச் சீலத்தை மேற்கொண்டாள். சோழ மன்னன் மனைவி இராசமாதேவி மணிமேகலையைச் சிறைப்பிடித்து வைத்திருந்த போது, அவளை விடுதலை செய்ய இவர் அரண்மனை சென்றார். இவரது வருகையைக் கண்ட இராசமாதேவி மிகுந்த வணக்கத்தோடு இவரை வரவேற்றாள் என்று கூறப்படுவதினின்றும், அரச குடும்பத்தினராலும் இவர் நன்கு மதிக்கப்பட்டிருந்தவர் என்பது விளங்கும்.

**129.** அறவண அடிகள் ____________ஒரு பௌத்தப் பள்ளியின் தலைவராக இருந்தவர்.

(1) பாதபங்க மலையில்

(2) இலங்கையில்

(3) காவிரிப்பூம்பட்டினத்தில்

(4) கங்கையில்

**130.** மாதவி யாருடைய பள்ளியை அடைந்தாள் ?

(1) அறவண அடிகளின் பள்ளி

(2) இலங்கையில் உள்ள பள்ளி

(3) மணிமேகலையின் பள்ளி

(4) மாதபங்கய மலையில் உள்ள பள்ளி

**131.** அறவண அடிகள் அரண்மனை செல்லக் காரணம் :

(1) இராசமாதேவியைச் சந்திக்க

(2) மணிமேகலையை விடுதலை செய்ய

(3) அரசக் குடும்பத்தினரின் மரியாதையைப் பெற

(4) மாதவியை விடுதலை செய்ய

**132.** அறவண அடிகள் நீண்ட காலம் வாழ்ந்த இடம் :

(1) இலங்கை

(2) பாத பங்கய மலை

(3) கங்கைக் கரையில்

(4) காவிரிப்பூம்பட்டினத்தில்

www.prepp.in
Prepp
Your Personal Exams Guide



**133.** செய்தி கேட்டு – இலக்கணக் குறிப்பெழுதுக.

(1) வினைத் தொகை

(2) அன்மொழித் தொகை

(3) வேற்றுமைத் தொகை

(4) பண்புத் தொகை

**134.** அறவண அடிகள் அரசக் குடும்பத்தாரால் மதிக்கப்பட்டவர் என்பதைக் காட்டும் நிகழ்வு :

(1) அவரை இராசமாதேவி வணக்கத்துடன் வரவேற்றமை

(2) அவர் இராசமாதேவியின் அரண்மனைக்குச் சென்றமை

(3) அவர் நாவன்மை கொண்டுருந்தமை

(4) பௌத்த தருமத்தைக் கற்றவர் எனப் புரிந்து கொண்டமை

**135.** அறவண அடிகள் பற்றிய எந்தக் கூற்று சரியானது ?

(1) அறவண அடிகள் வடக்கே கங்கை முதல் சமண தருமத்தைப் போதித்தவர்

(2) அறவண அடிகள் பாதபங்கய மலை வரையில் யாத்திரை செய்தவர்

(3) அறவண அடிகள் சோழ மன்னன் மனைவியைச் சிறைப்பிடித்து வைத்திருந்தார்

(4) அறவண அடிகளைச் சோழ மன்னன் மனைவி சிறைப்பிடித்து வைத்திருந்தாள்

கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண் **136-150)**

**136.** செரிவான வாசிப்பு குழந்தைகளிடம் இதற்கான ஆர்வத்தை வளர்க்கிறது.


(1) அறிமுகமற்ற சொற்களின் பொருள்களைத் தேடியறிவது.

(2) பாடப் பகுதியில் பயின்றுள்ள இலக்கணக் கூறுகளைப் பயில்வது.

(3) கவிதை ஒப்பித்தல்.

(4) மகிழ்வுக்காக எழுத்துக்களைப் படிக்கும் பழக்கம்.

**137.** ஒரு ஆசிரியர் 'மதுரை' பற்றிய ஒரு அத்தியாயத்தைத் தொடங்க இருக்கிறார். அதற்கு முன் கரும்பலகையில் ஒரு எழுத்து வரைபடம் வரைந்து 'மதுரை' எனக் குறிக்கிறார்.




(1) அரசு வரைபடம்

(2) கருத்தறிதல் வரைபடம்

(3) கதைப்பொருள் வரைபடம்

(4) வரைபடத் துணைக் கருவி

www.prepp.in



**138.** மாணவர்கள் எழுத்துத் திறன் பகுதியைப் பெற இது நன்கு பயன்படுகிறது.

(1) ஆசிரியர் படித்துக் காட்டுவது.

(2) குழந்தைகளுக்கான கருத்துக்களைக் கொண்ட பொருள் பொதிந்த ஒன்றாக அமைப்பது.

(3) ஆசிரியருடன் தொடர்புடைய கருத்தும் பண்பாட்டுச் சூழலும் கொண்டதாக அமைப்பது.

(4) பேச்சொலிக்கும் எழுத்து வடிவுக்கும் நேரடித் தொடர்புடையதாக அமைப்பது.

**139.** விளைவுசார்ந்த அணுகுமுறைக்கான கற்பித்தலின் பயன் விளைவு, பின்வருவனவற்றில் எது இல்லை ?

(1) அது முழுமையாக ஆசிரியரை மையமாகக் கொண்டது.

(2) அது நடத்தையியல் மாதிரியை அடிப்படையாகக் கொண்டது.

(3) அது முற்றுப் பெற்ற மொழிப் பயிற்சிப் பகுதியில் கவனம் செலுத்துகிறது.

(4) அது சிந்தனைகளை உருவாக்கவும், பெருக்கவும் கவனம் செலுத்துகிறது.

**140.** “புராசஸ்’ அணுகுமுறையில் எழுத்துப் பயிற்சி ஒன்றை உருவாக்கும் போது பயன்படுத்தக் கூடாதது எது ?

(1) பிரைன்ஸ்டார்மிங்

(2) குறிப்புகளை எடுத்துக் கூறல்

(3) முன் குறிப்புகள் எழுதுதல்

(4) எழுத்துப்படித் திருத்தம்

**141.** மொழி வகுப்புகளில் பாத்திரம் ஏற்று நடித்தல் ஒரு ஒன்றிணைந்த பகுதியாக இருக்க வேண்டும், ஏனென்றால்

(1) மாணவர் தமக்குப் பிடித்தமான வதந்திகளைப் பேச வாய்ப்பு ஏற்படுத்தித் தருகிறது.

(2) வகுப்பறை மேலாண்மை உத்திகளில் அதிகப் பயனுடைய ஒன்றாக அது உள்ளது.

(3) கதையை மனப்பாடம் செய்ய மாணவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தருகிறது.

(4) கருத்துச் செறிவுடைய மொழிப் பயிற்சியில் ஈடுபட மாணவர்களைப் பழக்குகிறது.

www.prepp.in
Prepp Your Personal Exams Guide



**142.** ஒரு குழந்தையிடம் ஒரு பொருள்/உணர்வு பற்றிக் கூறி அது பற்றிய ஒரு சிறிய பாடல் புனையச் சொல்லிக் கேட்கும் போது, அவர்கள் பயன்படுத்துவது :

(1) படைப்புச் சிந்தனை
(2) மேம்படுத்திக் கூறும் சிந்தனை
(3) இரக்கவுணர்வு கொண்ட சிந்தனை
(4) பண்பாடு சார்ந்த சிந்தனை

**143.** மாணவர்களை கூடுதல் வாசிப்புத் திறன் கொண்டவர்களாக மாற்றுவதற்கு சொல்வளத்தை மேம்படுத்துவது ஒரு முக்கியக் கூறாக உள்ளது. சொல்வளம் மேம்படுத்தலுக்கான உத்தி முறைகளில் பின்வருவனவற்றில் எது நல்ல ஒரு முறையாக இருக்கக் கூடும்?

(1) நேர்ப்பொருள் சொற்களையும், எதிர்ச் சொற்களையும் விரிவாகப் பட்டியலிட்டு மாணவர்கள் மனப்பாடம் செய்வது
(2) புதிய சொற்களைப் படிக்கும் தோறும் மாணவர்கள் அகராதியைப் பார்த்து பொருளறிவது
(3) பாடப் பகுதியில் உள்ள கடினமான சொற்களைப் படித்தவுடன் அடிக்கோடிட்டு, அவற்றைப் பயன்படுத்தி வாக்கியங்களை அமைத்தல்
(4) இடப் பொருத்தம் உணர்ந்து புதிய சொற்களின் பொருளை மாணவர்கள் கற்றுக் கொள்வது

**144.** ஒரு மாணவர் தன் வாழ்வில் மறக்கமுடியாத நிகழ்ச்சிகளைச் சொல்லச் சொல்ல கவனித்து ஒரு ஆசிரியர் எழுதுகிறார். அது இவ்வாறு குறிப்பிடப்படும் :

(1) ரூப்ரிக்ஸ் பதிவு
(2) போர்ட் ஃபோலியோ பதிவு
(3) ஆப்சர்வேஷன் பதிவு
(4) அனக்டோடல் பதிவு

**145.** பின்வருவனவற்றில் முழுமையடைந்த பேச்சுத் திறன் செயல்பாட்டின் ஒரு பண்புக் கூறாக உள்ளது எது?

(1) குழந்தைகளின் சமச்சீரற்ற பங்கேற்பு
(2) குழந்தைகள் பேசுவதற்கு வாய்ப்பளிக்கும் பயிற்சிச் செயல்பாடு
(3) கற்கும் மொழியில் மட்டும் பேசும்படி குழந்தைகளைக் கட்டுப்படுத்துவது
(4) வகுப்பறை மேலாண்மையின் நல்ல விளைவுக்கேற்ப பேச விரும்பும் பிள்ளைகளை அதிகம் பேச அனுமதித்தல்

www.prepp.in



**146.** விய்கோட்ஸ்கியின் கோட்பாடுப்படி மொழி கற்பதில் மிகமிக முக்கியமான காரணி

(1) சமூக உறவாடல்

(2) பாடநூல்

(3) வானொலி

(4) அகராதி

**147.** பேசுதல் திறன்களை வளர்ப்பதற்கு மிக நல்ல துணைபுரியும் பயிற்சி எது ?

(1) ஒரு பொருள் குறித்து மாணவர்கள் எடுத்து விளக்கும் நிகழ்வை ஒழுங்குபடுத்துவது

(2) மாணவர்களுக்கு ஆசிரியர் திட்டமிட்ட ஒரு பொருள் பற்றி படித்துக் கூறுவது

(3) அளிக்கப்பட்ட குறிப்புகளை அடிப்படையாக வைத்து மாணவர்கள் தம் விருப்பப்படி ஒரு கதையைக் கூறுவது

(4) ஒரு நல்ல ஆய்வறிக்கையை மாணவர்கள் உருவாக்குவது

**148.** மாணவர்கள் தமது முன் அனுபவ அறிவையும், புதிதாய்க் கற்ற அறிவையும் வகுப்பறைக்கு வெளியே உள்ள உலக அறிவுடன் தொடர்புபடுத்திக் காண்பதற்கு வாசித்தலின் எந்த நிலை உதவுகிறது ?

(1) பிரி-ரீடிங் வாசிப்பு நிலை

(2) வைல்-ரீடிங் நிலை

(3) பிஃபோர் ரீடிங் நிலை

(4) போஸ்ட்-ரீடிங் நிலை

**149.** காக்னிடிவிசக் கருத்துப்படி குழந்தைகள் இந்தச் சூழலில் மொழியை நன்கு கற்கிறார்கள்:

(1) வகுப்புகளை ஆசிரியர் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார். மாணவர்களுக்குக் குறைவான பங்கே அளிக்கிறார்

(2) இலக்கண விதிகளை மனப்பாடம் செய்யும்படி மாணவர்களை ஆசிரியர் ஊக்குவிக்கிறார்.

(3) கரும்பலகையில் இருப்பதைப் பார்த்து மாணவர்கள் தெளிவாக எழுதுகிறார்கள்.

(4) பல்வேறு திறன்கள் சார்ந்த பயிற்சிகள், பயிற்சி வினைகளில் பங்கேடுத்துக் கொள்ள அசிரியர் மாணவர்களை ஊக்கப்படுத்துகிறார்

**150.** ஒரு நல்ல கவனிப்பாளருக்கு இது இலகுவானது :

(1) ஒரு சொல்லை எவ்வாறு பயன்படுத்துவது என்பதைப் புரிந்து கொள்வது.

(2) மொழி நோக்கத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்று அடையாளம் காண்பது.

(3) கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான பதிலைத் தருவது.

(4) ஒவ்வொரு சொல்லையும் சரியாக உச்சரிப்பது.

www.prepp.in



SPACE FOR ROUGH WORK

Your Personal Exam Guide

www.prepp.in



**கீழ்வரும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும்**

1. கேள்விகளுக்கு விடையளிக்கும் முன் தேர்வு நூற்கட்டில் உள்ள விளக்கங்களைக் கவனமாகப் படிக்கவும், விடையளிக்க வேண்டிய வேறுபட்ட முறைகள் அதில் விளக்கப்பட்டுள்ளன.
2. பக்கம் 2-ல் ஓஎம்ஆர் (OMR) விடைத்தாளில் உள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய நான்கு விடைகளில் மிகச் சரியான ஒரு விடையை மட்டும் நீலம்/கறுப்புமை பந்துருள்முனைப் பேனாவினால் முழுவதுமாக மைபட்டை தீட்டப்பட வேண்டும்.
3. தேர்வு எழுதுபவர் அவர்தம் விடைத்தாள் மடிந்திருக்கவில்லை என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். விடைத் தாளில் எவ்விதமான அடித்தல் திருத்தலும் செய்தல் கூடாது. விடைத்தாளில் உரிய இடத்தில் மட்டுமின்றிப் பிற எங்கும் தேர்வு வரிசை எண்ணைக் குறிப்பிடக் கூடாது.
4. எச் சூழ்நிலையிலும் (தேர்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு/எண்ணும் தேர்வு விடைத்தாள் குறியீடு/எண்ணும் தம்முள் முரண்படும் நிலையில் மட்டுமன்றி) தேர்வு எழுதுபவருக்கு வேறொரு விடைத்தாள் இணை அளிக்கப்படாது. ஆகவே தேர்வு நூற்கட்டையும் விடைத்தாளையும் தேர்வு எழுதுபவர் மிகவும் கவனமாகக் கையாள வேண்டும்.
5. தேர்வு எழுதுபவர் தேர்வு வருகைத் தாளில் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள தேர்வு நூற்கட்டு மற்றும் விடைத்தாள் குறியீடு மற்றும் எண்களை சரியாகப் பதிவு செய்ய வேண்டும்.
6. ஓ.எம்.ஆர் விடைத்தாளில் உள்ள தகவல்களை ஒரு இயந்திரம் மதிப்பிட உள்ளது. அதனால் தகவல் எதுவும் விடுபடாமல் இருப்பதும் அனுமதி அட்டையில் தரப்பட்டிருப் பதிலிருந்து மாறுபடாமல் இருப்பதும் அவசியம்
7. தேர்வு எழுத அனுமதி அட்டை தவிர மற்றபடி அச்சு/கையெழுத்துக் குறிப்புகள், துணுக்குகள், பேஜர், செல்போன், மின்சாதனம் எதனையும் தேர்வுக் கூடத்திற்குள் தேர்வு எழுதுவோர் கொண்டு செல்லக் கூடாது.
8. தேர்வு அறைக்குள் அலைபேசி கருவிகள், தொலைத்தொடர்புக் கருவிகள் (செயல் நிறுத்தப்பட்ட நிலையில் கூட) மற்றும் தடை செய்யப்பட்ட பொருள்கள் எதுவும் கொண்டுவரப்படக் கூடாது. இதனைக் கடைபிடிக்காத தேர்வு எழுதுவோர் முறைமீறியவராக கொள்ளப்பட்டு தேர்விலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுது உட்பட பிற நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரும்.
9. தேர்வு மேற்பார்வையாளர் வினவும் போது தேர்வு எழுதுபவர் தம் அனுமதி அட்டையைக் காண்பிக்க வேண்டும்.
10. தேர்வுக் இடக் கண்காணிப்பாளர்/தேர்வு மேற்பார்வையாளர் சிறப்பு அனுமதியின்றித் தேர்வு எழுதுபவர் தம் இருக்கையிலிருந்து வெளியேறக் கூடாது.
11. தேர்வு மையத்திற்குள் நுழைதல், தேர்வு மையத்திலிருந்து வெளியேறுதல் ஆகிய இரு வேளையிலும் தேர்வு வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாமலும், விடைத்தாளை மேற்பார்வையாளரிடம் திருப்பி அளிக்காமலும் வெளியேறக் கூடாது. வெளியேறுகையில் வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாத தேர்வு எழுதுபவரின் விடைத்தாள் திருப்பி அளிக்கப்படாததாகக் கருதப்படும். இந்த முறை மீறிய செயலுக்கு உரிய எதிர்வினை மேற்கொள்ளப்படும்.
12. மின் இயங்கு/மின் இயங்காக் கணிப்பான்களுக்கு அனுமதி இல்லை.
13. தேர்வு ஆணையத்தின் அனைத்துவிதமான நடத்தை விதிமுறைகளுக்கும் தேர்வு எழுதுபவர் கட்டுப்படுவது கட்டாயம். முறை மீறிய செயல்கள் மீது தேர்வாணையத்தின் விதிமுறைகள்படி நடவடிக்கை எடுக்கப்படும்.
14. எச் சூழலிலும் தேர்வு நூற்கட்டும் விடைத்தாளும் தனித்தனியே பிரிக்கப்படக் கூடா.
15. தேர்வு எழுதி முடித்தபின் தேர்வு எழுதுபவர் தம் விடைத்தாளை மேற்பார்வையாரிடம் திருப்பி அளிக்க வேண்டும். தேர்வு எழுதுவோர் இத் தேர்வு நூற்கட்டை உடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

www.prepp.in

Prepp
Your Personal Exams Guide



**निम्नलिखित निर्देशों को ध्यान से पढ़ें :**

1. जिस प्रकार से विभिन्न प्रश्नों के उत्तर दिए जाने हैं उसका वर्णन परीक्षा पुस्तिका में किया गया है, जिसे आप प्रश्नों का उत्तर देने से पहले ध्यान से पढ़ लें ।
2. प्रत्येक प्रश्न के लिए दिए गए चार विकल्पों में से सही उत्तर के लिए OMR उत्तर पत्र के **पृष्ठ-2** पर केवल एक वृत्त को ही पूरी तरह **काले/नीले बॉल पॉइन्ट पेन** से भरें । एक बार उत्तर अंकित करने के बाद उसे बदला नहीं जा सकता है ।
3. परीक्षार्थी सुनिश्चित करें कि इस उत्तर पत्र को मोड़ा न जाए एवं उस पर कोई अन्य निशान न लगाएँ । परीक्षार्थी अपना अनुक्रमांक उत्तर-पत्र में निर्धारित स्थान के अतिरिक्त अन्यत्र न लिखें ।
4. परीक्षा पुस्तिका एवं उत्तर पत्र का ध्यानपूर्वक प्रयोग करें, क्योंकि किसी भी परिस्थिति में (केवल परीक्षा पुस्तिका एवं उत्तर पत्र के संकेत या संख्या में भिन्नता की स्थिति को छोड़कर) दूसरी परीक्षा पुस्तिका उपलब्ध नहीं करायी जाएगी ।
5. परीक्षा पुस्तिका / उत्तर पत्र में दिए गए परीक्षा पुस्तिका संकेत व संख्या को परीक्षार्थी सही तरीके से हाज़िरी-पत्र में लिखें ।
6. OMR उत्तर पत्र में कोडित जानकारी को एक मशीन पढ़ेगी । इसलिए कोई भी सूचना अधूरी न छोड़ें और यह प्रवेश-पत्र में दी गई सूचना से भिन्न नहीं होनी चाहिए ।
7. परीक्षार्थी द्वारा परीक्षा हॉल/कक्ष में प्रवेश-पत्र के सिवाय किसी प्रकार की पाठ्य-सामग्री, मुद्रित या हस्तलिखित, कागज़ की पर्चियाँ, पेजर, मोबाइल फोन, इलेक्ट्रॉनिक उपकरण या किसी अन्य प्रकार की सामग्री को ले जाने या उपयोग करने की अनुमति नहीं है ।
8. मोबाइल फोन, बेतार संचार युक्तियाँ (स्वीच ऑफ अवस्था में भी) और अन्य प्रतिबंधित वस्तुएँ परीक्षा हॉल/कक्ष में नहीं लाई जानी चाहिए । इस सूचना का पालन न होने पर इसे परीक्षा में अनुचित साधनों का प्रयोग माना जाएगा और उनके विरुद्ध कार्यवाही की जाएगी, परीक्षा रद्द करने सहित ।
9. पूछे जाने पर प्रत्येक परीक्षार्थी, निरीक्षक को अपना प्रवेश-पत्र दिखाएँ ।
10. केन्द्र अधीक्षक या निरीक्षक की विशेष अनुमति के बिना कोई परीक्षार्थी अपना स्थान न छोड़ें ।
11. कार्यरत निरीक्षक को अपना उत्तर पत्र दिए बिना एवं हाज़िरी-पत्र पर दुबारा हस्ताक्षर किए बिना परीक्षार्थी परीक्षा हॉल/कक्ष नहीं छोड़ेंगे । यदि किसी परीक्षार्थी ने दूसरी बार हाज़िरी-पत्र पर हस्ताक्षर नहीं किए, तो यह माना जाएगा कि उसने उत्तर पत्र नहीं लौटाया है और यह अनुचित साधन का मामला माना जाएगा । **परीक्षार्थी अपने बाएँ हाथ के अंगूठे का निशान हाज़िरी-पत्र में दिए गए स्थान पर अवश्य लगाएँ ।**
12. इलेक्ट्रॉनिक / हस्तचालित परिकलक का उपयोग वर्जित है ।
13. परीक्षा हॉल/कक्ष में आचरण के लिए परीक्षार्थी बोर्ड के सभी नियमों एवं विनियमों द्वारा नियमित हैं । अनुचित साधनों के सभी मामलों का फैसला बोर्ड के नियमों एवं विनियमों के अनुसार होगा ।
14. किसी हालत में परीक्षा पुस्तिका और उत्तर पत्र का कोई भाग अलग न करें ।
15. **परीक्षा सम्पन्न होने पर, परीक्षार्थी हॉल / कक्ष छोड़ने से पूर्व उत्तर पत्र कक्ष-निरीक्षक को अवश्य सौंप दें । परीक्षार्थी अपने साथ इस परीक्षा पुस्तिका को ले जा सकते हैं ।**

**READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY:**

1. The manner in which the different questions are to be answered has been explained in the Test Booklet which you should read carefully before actually answering the questions.
2. Out of the four alternatives for each question, only one circle for the correct answer is to be darkened completely with **Black/Blue Ball Point Pen** on **Side-2** of the OMR Answer Sheet. The answer once marked is not liable to be changed.
3. The candidates should ensure that the Answer Sheet is not folded. Do not make any stray marks on the Answer Sheet. Do not write your Roll No. anywhere else except in the specified space in the Answer Sheet.
4. Handle the Test Booklet and Answer Sheet with care, as under no circumstances (except for discrepancy in Test Booklet Code or Number and Answer Sheet Code or Number), another set will be provided.
5. The candidates will write the correct Test Booklet Code and Number as given in the Test Booklet / Answer Sheet in the Attendance Sheet.
6. A machine will read the coded information in the OMR Answer Sheet. Hence, no information should be left incomplete and it should not be different from the information given in the Admit Card.
7. Candidates are not allowed to carry any textual material, printed or written, bits of papers, pager, mobile phone, electronic device or any other material except the Admit Card inside the examination hall/ room.
8. Mobile phones, wireless communication devices (even in switched off mode) and the other banned items should not be brought in the examination halls/ rooms. Failing to comply with this instruction, it will be considered as using unfair means in the examination and action will be taken against them including cancellation of examination.
9. Each candidate must show on demand his / her Admit Card to the Invigilator.
10. No candidate, without special permission of the Centre Superintendent or Invigilator, should leave his / her seat.
11. The candidates should not leave the Examination Hall/ Room without handing over their Answer Sheet to the Invigilator on duty and sign the Attendance Sheet twice. Cases where a candidate has not signed the Attendance Sheet second time will be deemed not to have handed over the Answer Sheet and dealt with as an unfair means case. **The candidates are also required to put their left hand THUMB impression in the space provided in the Attendance Sheet.**
12. Use of Electronic / Manual Calculator is prohibited.
13. The candidates are governed by all Rules and Regulations of the Board with regard to their conduct in the Examination Hall/Room. All cases of unfair means will be dealt with as per Rules and Regulations of the Board.
14. No part of the Test Booklet and Answer Sheet shall be detached under any circumstances.
15. **On completion of the test, the candidate must hand over the Answer Sheet to the Invigilator in the Hall / Room.** ***The candidates are allowed to take away this Test Booklet with them.***